(இ) அரிசனத் தாய்மார்கள் குடும்பக் கட்டுப்பாட்டு திட்டத்தைக் கடைப்பிடிக்கத் தேவையில்லையென்று அரிசன நலத்துறை அமைச்சர் பொதுக் கூட்டத்தில் பேசியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. ஜேம்ஸ் அவர்கள்

"That the Hon. Minister for Harijan Welfare has said in a public meeting on 13th April 1974 in Madras as follows: "Let the Harijan mothers have no family planning but bear as many children as possible and to take a vow to wreak vengeance against those trying to suppress us". This statement of the Hon. Minister for Harijan Welfare is against the national policy of the Centre and the Tamil Nadu and dangerous to the country", என்பதாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கக்கூடிய அளவிற்கு முக்கியமானது என்பதைச் சுருக்கமாக விளக்க வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் 13—4—1974-ஆம் தேதி டாக்டர் அம்பேத்கார் சிலை திறப்பு விழா நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் . . .

3. நடைமுறைக் கேள்வி.

அரிசன நலத்துறை அமைச்சர் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் குறித்து பொதுக்கூட்டத்தில் பேசியதை ஒத்திவைப்புத் தீர்மானத்தின்கீழ் எழுப்பலாமா என்பது குறித்து.

THIRU V. KRISHNAMOORTHY: Sir, on a point of order. (Interruption). I am raising a point of order, Sir, even assuming that the reported speech was made by the Hon. Minister, how can it attract the Rules of our Assembly to bring in an adjournment motion and how is the Hon. Speaker allowing the notice to be taken up in the House?

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, it is a national policy that there should be Family Planning and the Centre and State are spending crores and crores of money on it. When a

1974 ஏப்ரல் 17] [THIRUMATHI T. N. Anandanayaki]

Minister without realising the collective responsibility of the Cabinet preaches against the policy, it is definitely a matter of urgent importance. What else is it then?

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, . . .

THIRU M. A. LATHEEF: No doubt in the Ministry any Minister is responsible because of the concept of collective responsibility. But no statement was made by the Hon. Minister for Harijan Welfare which is a policy statement and it was not made on the floor of the House. It was an individual opinion made by an individual, Mrs. Sathyavani Muthu and not by the Ministerfor for Harijan Welfare who is a member of the Cabinet. Family Planning is only a policy, not a Constitutional mandate. It is only a national policy. Therefore, there is no question of bringing in the concept of Cabinet joint responsibility in this.

THIRU R. PONNAPPA NADAR: May I make a submission, Sir? (Interruption). Sir, I want to make a submission. Sir, so far as this important matter is concerned, I think it would be well advised that the policy statement always emanates from the Chief Minister. The Hon. Minister for Harijan Welfare is reported to have made a speech; whether that speech is justified or not is not the question which is now being discussed here.

As a responsible member of the Cabinet, there could be no place for any Minister to make an individual opinion in public utterances. If that is done, it is likely to be misconstrued as the opinion of the Cabinet. That is the reason why this important motion given notice of by our party member, Mr. James arises, and I think there is nothing inappropriate in the matter being discussed now.

Further, the Hon. Speaker has given Mr. James permission to explain how the matter comes within the ambit of the Rules. There is therefore no further point in discussing about it.

திரு. கோவை செழியன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதை வைத்துக் கொண்டு இங்கு உறுப்பினர்கள் எல்லாம் இந்தப் பிரச்சனைகளைக் கிளப்புகிறார்கள். (திரு. வி. கிருஷ்ண மூர்த்தி எழுந்திருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன?

திரு. கோவை செழியன் : அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். அவர்கள் ஏற்கெனவே இந்த மன்றத்தில் ஒரு கருத்தைச் சொன்னார்கள்—அதைத்தான் அங்கும் சொல்லியிருக்கிறார்களே தவிர—நாட்டுக்கு விரோதமாக இருக்க வேண்டுமென்று பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. உட்காருங்கள்.

திரு. கோவை செழியன் : எப்படி நான் பேசி முடிவதற்குள் இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொல்ல முடியும்?

திரு. முனு ஆதி : மற்றவர்களை எல்லாம் பேசச் சொன்னீர்கள். எங்கள் கட்சி உறுப்பினரை மட்டும் உட்கார் என்று சொன்னால் என்ன அர்த்தம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. முனு ஆதி, நீங்கள் உட்காருங்கள். அவரையும் பேசச் சொல்லித்தான், பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று பிறகு சொன்னேன் . . .

திரு. கோவை செழியன் : திரு. லத்தீபைப் பேசச் சொன்னீர்கள். நாங்கள் எங்கள் கருத்தை அவையில் எடுத்துச் சொல்லக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன? அவையில் இதை எழுப்பக் கூடாது என்பது தானே? அவர்கள் இந்த அவையில் முன்பு சொன்ன கருத்துக்களுக்கு எல்லாம் என் போகிறீர்கள்?

1974 ஏப்ரல் 17]

திரு. கோவை செழியன் : அதைத்தான் நானும் சொல்ல வந்தேன். இதை இந்த அவையில் அட்ஜர்ன்மெண்டு மோஷனைக் கொண்டுவந்திருக்கக் கூடாது. அவர்கள் ஏற்கெனவே இந்த அவையில் பேசின கருத்தைத்தான் முதலமைச்சரின் கவனத்தை ஈர்க்கவேண்டுமென்ற முறையில் அங்கே பேசியிருக்கிறார்கள். நானே முதலமைச்சர் அவர்களிடத்தில் இதுபற்றிக் கேட்டேன். அவர் பதில் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. உட்காருங்கள். திரு. கே. டி. கே. பேசுவார். (திரு. முனு ஆதி எழுந்திருந்தார்.) நீங்கள் உட்காருங்கள்.

திரு. கோவை செழியன் : உட்கார், உட்கார் என்று எங்களைப் பேச அனுமதிக்கமாட்டீர்கள் என்றால் நான் இந்த அவையில் இருந்து வெளிநடப்பு செய்ய வேண்டியதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பாயிண்ட் ஆஃப் ஆர்டரைப் பற்றிச் சொன்னால் ஆட்சேபனை இல்லை.

திரு. கோவை செழியன் : திரு. லத்தீப் பேசினார்களே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் எழுப்பியதும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொல்லிவிட்டேன்.

திரு. கோவை செழியன் : நான் சொல்வதை ஏன் கேட்கக் கூடாது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் சொல்வதைச் சொல்லியாகிவிட்டது. திரு. கே. டி. கே. தங்கமணி.

திரு. கே. டி. கே. தங்கமணி : பொதுவாக 42-வது விதியைப் பொறுத்தவரையில் இது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்று முடிவு செய்ய வேண்டியது உங்கள் பொறுப்பு. வெளியில் தனிப்பட்ட அமைச்சரோ, தனிப்பட்ட உறுப்பினரோ பேசினார்கள் என்று சொன்னால்—முறையாக இந்தச் சபைக்கு அந்த விஷயத்தைக் கொண்டுவர வேண்டுமென்றால்—அவர் இந்த அவையை அவமதித்ததாக—ப்ரிவிலேஜ் மோஷனைக் கொண்டு வருவது பொருத்தமாக இருக்குமே தவிர அட்ஜர்ன்மெண்டு மோஷனைக் கொண்டு வருவது சரியல்ல என்பது என் கருத்து. நாளைக்கு இதுபோல வேறு ஒரு உறுப்பினர் மீது கூடக் கொண்டு

வரலாம். வேண்டுமென்றால் இதை ப்ரிவிலேஜ் மோஷனாகக் கொண்டு வரலாம், அதுதான் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

DR. H. V. HANDE: I am raising a valid point, Sir, I am not going into the politics of the whole thing. What I say will help the Hon. Speaker to arrive at a decision.

Sir, the practice has been this. Whenever we give notice of adjournment motions, they are disposed of in three ways. Firstly, the Hon. Speaker sends a communication to us saying that the matter could not be raised as there is no direct involvement of the Government in it. Usually, he sends a letter.

Now, in allowing this matter to be taken up for discussion or explanation so that the Hon. Speaker could decide whether the motion is to to be admitted or not, he has not sent a communication to the hon. Member disallowing it.

The hon. Member, Krishnamoorthy has rightly raised the point of order and he has raised a very valid point of order. The Speaker could have sent a communication, if he had felt that the matter does not involve direct administration of the Government and sent a communication.

(டேடு டே அட்மினிஸ்டிரேஷன் கிடையாது)

The Hon. Speaker has not done it.

He had sent similar communications on several occasions. The fact that the Speaker has allowed the matter to be brought to the House indicates that the Speaker feels that there is responsibility of the Government. Otherwise, he could have raised that it was not in order. On that score I do not say that all adjournment motions should be disposed off in his chamber.

ஹாண்டே அப்படிச் சொன்னார் என்று தள்ளி விடாதீர்கள்.

Therefore I feel that Mr. Krishnamoorthy and Mr. Chezhian have raised very valid points. And a little heat also had been brought in. Therefore, if the Hon. Speaker gives a ruling that this is a matter of urgent public importance, it would be helpful. Otherwise, he would have sent a communication.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, ரூல் 50 பிரகாரம் Sub-clause-x இல் கூறப்பட்டிருப்பது 'A motion must refer that the responsibility of the Government is cleary involved' அப்படியிருந்தால் கொண்டுவரலாம். அப்படி இருக்கிறதனாலே தான் தாங்கள் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு பேச அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். ஆகவே இது பற்றி அதிகப்படியான விவாதம் இல்லாமல், எங்கள் கட்சி உறுப் பினர் திரு. ஜேம்ஸ் அவர்களை அதுபற்றிப் பேச அழைக்கும் படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.30)

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** பேரவைத் தலைவரவர்களே, இப் பொழுது மதிப்பிற்குரிய உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் கொண்டு வந்திருக்கிற ஒத்திவைப்புப் பிரேரணை சரியானதா இல்லையா என்பதுபற்றி இங்கே பல கருத்துக்கள் பேசப்படுகின்றன. குடும்பக் கட்டுப்பாடு என்பது அரசாங்கத்தால், மத்திய அரசால், மாநில அரசால் ஒத்துக்கொள்ளப்பட்ட ஒரு கொள்கை. இந்தக் கொள்கையை அமுலாக்குவதற்கு அமைச்சரவை முக்கிய பங்கெடுத்துக் கொண்டு காரியங்களை ஆற்றிக் கொண்டு வருகிறது. அப்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கொள்கையை நடைமுறை யிலே காரியங்கள் ஆற்றிவருகிறபொழுது, இந்த அமைச்சரவை யிலே இருக்கிற ஒரு அமைச்சர் இதற்கு மாறான கருத்தைக் கூறுவது எப்படிப் பொருத்தமாக இருக்கும்?

நாட்டிலே குடும்பக் கட்டுப்பாடு மிகத் தீவிரமாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. பொருளாதாரத்தைக் கருத்திலே கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிற ஒரு திட்டத்திற்கு எதிரான கருத்தை நாட்டிலே நிலவவிடுவது, பொருளாதாரத்தை சீர்குலைத்துவிடுகின்ற நடவடிக்கையாகிவிடும். ஆகவே, இதை, அட்ஜேர்மென்ட் மோஷனில் கொண்டுவராமல் வேறு எப்படிக் கொண்டு வரலாம்? ஆகவே, கனம் தலைவர் அவர்கள் இதை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU V. KRISHNAMOORTHY: It is not violation of the policy of the Government and how can it come under an adjournment motion?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாய்ன்ட் ஆப் ஆர்டர் எழுப்பினுர்கள். அதற்காகச் சொல்ல வரவில்லை. ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்கின்ற நேரத்திலே, முடிவெடுக்கின்ற நேரத்திலே, அறையிலேயே பேரவைத் தலைவர் அவர்களுக்குத் திட்டவட்டமாக, இதை மறுக்கலாம் என்ற காரணமிருந்தால், அதற்கு அறையிலேயே கூட அனுமதி மறுத்திருக்கலாம். கொஞ்சம் சந்தேகம் வந்து அவையிலே எழுப்பலாம் என்ற அளவில், உறுப்பினரிடத்திலே விளக்கமும், அமைச்சரிடத்திலே விளக்கமும் பெற்று, பிறகு அதைப்பற்றிய முடிவெடுப்பது ஒரு முறை. அந்த முறையிலே, இரண்டாவது முறையில், இது அவைக்கு வந்திருக்கிறது. இது ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் கீழ் வரக்கூடியதா என்பதல்ல. இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் அனுமதிக்கக் கூடிய அளவு உள்ளதா, அல்லது இதற்கு அனுமதி மறுக்கலாமா என்பதை விவாதிப்பதற்குத்தான் இப்பொழுது கேட்கப்பட்டதே தவிர, அவையிலே இதை எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது என்ற கருத்திலே எடுத்துக் கொள்ளப்படக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—(தொடர்ச்சி).

(இ) அரிசனத் தாய்மார்கள் குடும்பக் கட்டுப்பாட்டு திட்டத்தைக் கடைப்பிடிக்கத் தேவையில்லையென்று அரிசன நலத் துறை அமைச்சர் பொதுக்கூட்டத்தில் பேசியது குறித்து.—தொடர்ச்சி.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் 13—4—1973-ந் தேதியன்று டாக்டர் அம்பேத்கார் அவர்களின் சிலைத் திறப்பு விழாவின்போது ஆற்றிய உரையில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைக் கடைபிடிக்கத் தேவை இல்லை, அத்தோடு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த தாய்மார்கள் அதிகமான குழந்தைகளைப் பெற்று, அந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு எதிராக இருக்கிற சக்திகள் மீது ஒரு போராட்டம் நடத்த நான் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறேன்—அதற்கு நான் தலைமை தாங்க இருக்கிறேன்—அதற்காகப் போராட்ட வீரர்கள்